©
தமிழ்நாடு அரசு
2009

[Regd. No. TN/CCN/467/2009-11.
[விலை: ரூ. 0.80 காசு

# தமிழ்நாடு அரசிதழ்

ஆணையின்படி வெளியிடப்பட்டது.

எண் 15] சென்னை, புதன்கிழமை, ஏப்ரல் 22, 2009
சித்திரை 9, திருவள்ளுவர் ஆண்டு – 2040

## பகுதி III—பிரிவு 1(a) இன் இணைப்பு

### அரசாங்க அறிவிப்புகளின் தமிழ் மொழிபெயர்ப்புகள்

#### தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை

*[அரசாணை (நிலை) எண் 50, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (H1)த் துறை, நாள்: 7 மே 2008.]*

1970ஆம் ஆண்டு ஒப்பந்தத் தொழிலாளர் (முறைப்படுத்தல் மற்றும் ஒழிப்பு) சட்டத்தின் (மத்தியச் சட்டம் 37/1970) 35 ஆம் பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, 22 ஆகஸ்ட் 2001 ஆம் நாளிட்ட ***தமிழ்நாடு அரசிதழில்*** பாகம் III—பிரிவு 1(a), 116 மற்றும் 117 ஆம் பக்கங்களில் (ஆங்கிலத்தில்) வெளியிடப்பட்ட தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறையின் SRO A-51/2001 ஆம் எண் அறிவிக்கை மற்றும் 3 நவம்பர் 2004 ஆம் நாளிட்ட ***தமிழ்நாடு அரசிதழில்*** பாகம் III— பிரிவு 1 (a), 108 மற்றும் 109 ஆம் பக்கங்களில் (ஆங்கிலத்தில்) வெளியிடப்பட்ட SRO A–45/2004 ஆம் எண் அறிவிக்கைகளை ரத்து செய்துவிட்டு அதற்கு பதிலாகவும், வெளியிடக் கருதப்பட்டுள்ள தமிழ்நாடு 1975 ஆம் ஆண்டு ஒப்பந்தத் தொழிலாளர் (முறைப்படுத்தல் மற்றும் ஒழிப்பு) விதிகளின் பின்வரும் வரைவு திருத்தங்கள், மேற்சொன்ன சட்டத்தின் 35 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவில் சொல்லியுள்ளவாறு இதனால் பாதிக்கப்படக்கூடிய அனைவரின் தகவலுக்காக இதனால் வெளியிடப்படுகிறது.

**2.** இந்த வரைவு திருத்தங்கள், ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்து ஒரு மாதம் முடிவடையும் நாளன்று அல்லது அந்நாளுக்குப் பின்னர் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்றும், மேற்சொன்ன கால அளவிற்குள் எவரிடமிருந்தேனும் இது குறித்த மறுப்புரை அல்லது கருத்துரை ஏதேனும் வரப்பெற்றால், அதனை தமிழ்நாடு அரசு பரிசீலிக்கும் என்றும் இதனால் அறிவிக்கப்படுகிறது. மறுப்புரை அல்லது கருத்துரை ஏதேனுமிருப்பின், அதனை சென்னை–6 இல் உள்ள தொழிலாளர் நல ஆணையாளர்மூலமாக அரசுச் செயலாளர், தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, தலைமைச்செயலகம், சென்னை–9 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

#### வரைவுத் திருத்தங்கள்

மேற்சொன்ன விதிகளில்,—

(A) 24 ஆம் விதியின் (1) துணை விதியில், ''ரூ. 50'' என்ற தொடருக்குப் பதிலாக, ''ரூ. 100/– (ரூபாய் நூறு மட்டும்)'' என்ற தொடர் அமைத்துக் கொள்ளப்பட வேண்டும் ;

(B) 26 ஆம் விதியில், (1) மற்றும் (2) துணை விதிகளுக்குப் பதிலாக பின்வரும் துணை விதிகள் அமைத்துக் கொள்ளப்பட வேண்டும்.

அதாவது :

"(1) 7 ஆம் பிரிவின்கீழ், பதிவுச் சான்றிதழ் பெறுவதற்காக செலுத்தப்பட வேண்டிய கட்டணங்கள் கீழே குறிப்பிடப்பட்டவாறு இருக்க வேண்டும், அவையாவன:—

யாதொரு நாளில் ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தப்படுவதற்கு கருதப்பட்ட தொழிலாளர்களின் எண்ணிக்கை :

| | ரூ. |
|---|---|
| (*a*) 20—க்கு மிகாமல் இருக்குமாயின் | 200 |
| (*b*) 20—க்கு கூடுதலாக ஆனால் 50—க்கு மிகாமல் இருக்குமாயின் | 400 |
| (*c*) 20—க்கு கூடுதலாக ஆனால் 100—க்கு மிகாமல் இருக்குமாயின் | 1,000 |
| (*d*) 100—க்கு கூடுதலாக ஆனால் 200—க்கு மிகாமல் இருக்குமாயின் | 2,000 |
| (*e*) 200—க்கு கூடுதலாக ஆனால் 400—க்கு மிகாமல் இருக்குமாயின் | 4,000 |
| (*f*) 400—க்கு அதிகமாக இருக்குமாயின் | 6,000 |

(2) 12 ஆம் பிரிவின்கீழ், உரிமம் பெறுவதற்காக செலுத்தப்பட வேண்டிய கட்டணங்கள் கீழே குறிப்பிடப்பட்டவாறு இருக்க வேண்டும்; அவையாவன:—

யாதொரு நாளில், ஒப்பந்ததாரரால் பணியமர்த்தப்பட்ட தொழிலாளரின் எண்ணிக்கை :

| | ரூ. |
|---|---|
| (*a*) 20—க்கு மிகாமல் இருக்குமாயின் | 100 |
| (*b*) 20—க்கு கூடுதலாக ஆனால் 50—க்கு மிகாமல் இருக்குமாயின் | 150 |
| (*c*) 20—க்கு கூடுதலாக ஆனால் 100—க்கு மிகாமல் இருக்குமாயின் | 200 |
| (*d*) 100—க்கு கூடுதலாக ஆனால் 200—க்கு மிகாமல் இருக்குமாயின் | 300 |
| (*e*) 200—க்கு கூடுதலாக ஆனால் 400—க்கு மிகாமல் இருக்குமாயின் | 400 |
| (*f*) 400—க்கு அதிகமாக இருக்குமாயின் | 500 |

(C) 29 ஆம் விதியின் (3) ஆம் துணை விதியில், "கட்டணத்தின் 75 சதவீதம்" என்ற தொடருக்கு பதிலாக "அதே போன்ற" என்ற தொடர் அமைத்துக்கொள்ளப்பட வேண்டும்; மற்றும்

(D) 30 ஆம் விதியில், "ரூ. 25/—" என்ற தொடருக்குப் பதிலாக "ரூ. 50/— (ரூபாய் ஐம்பது மட்டும்)" என்ற தொடர் அமைத்துக்கொள்ளப்பட வேண்டும்.

**ரமேஷ்குமார் கன்னா,**
*அரசு செயலாளர்.*

(தமிழாக்கம்)

**தி. வைரவசுந்தரம்,**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள்*
*மற்றும் செய்தி (மொழிபெயர்ப்பு)த் துறை.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரால்
அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.